வதற்கு வாய்ப்பை உருவாக்கும் நிலையில் திரைப்படங்கள் மூலமாகவும், கலை நிகழ்ச்சிகள் மூலமாகவும், நாடகங்கள் மூலமாகவும் அரசு விளம்பரம் செய்வது இந்தத் திட்டத்தைப் பயனுள்ளதாக்கும் அல்லவா ?, அந்த வகையில் அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : ஏற்கெனவே அதற்குப் போதுமான அளவு விளம்பரம் செய்யப்படுகிறது. சுமார் நாற்பது, ஐம்பதாயிரம் ரூபாய் செலவில் ஒரு திரைப்படம்கூட எடுக்கும் முயற்சிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 312, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

திரு. நா. வீராசாமி : சார், ஒரு முக்கியமான கேள்வி. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்னும் நிறைய கேள்விகள் இருக்கின்றன. வினா எண். 312, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

முதியோர் உதவித் தொகை.

* 312 வினா—**திரு. சோ. அழகர்சாமி :** மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) 1967-ம் ஆண்டு நமது மாநிலத்தில் முதியோர் பென்ஷன் திட்டத்தின் கீழ் எத்தனை பேருக்கு உதவித்தொகை வழங்கப்பட்டு வந்தது ?

(இ) தற்போது மேற்படி திட்டத்தின் கீழ் எத்தனை பேருக்கு உதவித்தொகை வழங்கப்படுகிறது ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :

(அ) 1967 ஜனவரியில் உள்ளவாறு 43,121 பேருக்கு முதியோர் உதவித்தொகை வழங்கப்பட்டு வந்தது.

(இ) 22—11—1973-ஆம் நாளன்றின்படி 44,505 பேருக்கு முதியோர் உதவித்தொகை வழங்கப்பட்டு வருகிறது.